ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1801/37 - 2013 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2013.03.15
*1801/37 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைகள் சட்டம்**

*6 ஆம் பிரிவின் கீழான கட்டளை சேவை வழங்குநர்களை நியமித்தல்*

*2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், சிவில் விமான சேவைகள் அமைச்சராகிய பியங்கர ஜெயரத்ன ஆகிய நான், வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் விமான சேவைக் கம்பனி இங்கு பின்வரும் I ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளினதும், வரையறைகளினதும் பிரகாரம், இங்கு பின்வரும் II ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சேவைகளை வழங்குவதற்காக வழங்குநராக நியமிக்கப்பட்டதை இவ்வுத்தரவின் பிரகாரம் வெளிப்படுத்துகின்றேன்.*

*பியங்கர ஜெயரத்ன,*
*சிவில் விமான சேவைகள் அமைச்சர்.*

*2013.03.12.*

***அட்டவணை I***

***நியமிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்***

1. *இங்கு II ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சேவைகளை வழங்கும்போது சேவை வழங்குநரினால் 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் கீழ் அல்லது ஏனைய எழுத்தாலான சட்டத்தின் கீழ் உரிய சட்ட ஒதுக்கீடுகளுக்கும், அந்த சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் விதிகள், விதிமுறைகள் மற்றும் நடைமுறைப் படுத்தும் தரங்களுக்கு இயைவாக செயலாற்றுதல் வேண்டும்.*

2. *சேவை வழங்குநரினால் தமது சேவைகளை வழங்குவதற்குரிய அவ்வப்போது அமைச்சரினால் வழங்கப்படும் பொதுவான மற்றும் விசேட வழிமுறைகளுக்கு இயைவாக செயலாற்றுதல் வேண்டும்.*

3. *சேவை வழங்குநருக்கு நியதிச் சட்ட சேவை வழங்குநரினால் உட்குத்தகையிற்கு வழங்கப்பட்ட அனைத்து அசையும் அசையாத சொத்துக்கள் சேவை வழங்குநரினால் வான் போக்குவரத்து கைத்தொழில்துறையில் மேம்பாட்டிற்கு ஏற்ற வகையில் அவ்வண்ணமே பேணப்படவேண்டியதுடன், அக்குறித்த சொத்துக்கள் மூன்றாம் தரப்பினருக்கு குத்தகையிற்கு விடுதல் மேற்கொள்ளுதல் கூடாது.*

4. *இங்கு குறிப்பிட்டுள்ள திகதியின் பின்னர் சேவை வழங்குநரினால் வழங்கப்படுகின்ற வான்செலவுச் சேவை தொடர்பாக பிரவேசிக்கும் ஒப்பந்தம், அவ்வொப்பந்தத்தில் இதற்கு முரண்பாடான ஏற்பாடுகள் இருந்தாலன்றி, சேவை*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வழங்குநரினால் அக்குறித்த சேவை வழங்குநர் சார்பாக ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்களாக கருதக்கூடியவைத் தவிர்ந்த, அக்குறித்த ஒப்பந்தங்கள் எவ்விதத்திலும் அரசு சார்பாக அல்லது அரசு குறித்த ஒப்பந்தத்தின் பால் கட்டுப்படுத்துதல் மேற்கொள்ளப்பட மாட்டாது.

5. அமைச்சின் அமைச்சரின் செயலாளரின் எழுத்தாலான வேண்டுகோளின் பிரகாரம் நியதிச் சட்ட சேவை வழங்குநரால் வழங்கப்படுகின்ற வான்செலவுச் சேவைகளுக்குரிய நிர்வாகம், தொழிற்பாடு, தொழில்நுட்பம் மற்றும் நிதிநிலைக் காரணிகள் அக்குறித்த செயலாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

6. சேவை வழங்குநரினால் வழங்கப்படுகின்ற சேவைகள் அதற்குரிய சர்வதேச தரங்களுக்கு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வழக்கங்களுக்கமைய வழங்குவதற்காக சேவை வழங்குநரினால் இலங்கை சிவில் விமானச் சேவைகள் அதிகார சபையினால் அல்லது சிவில் விமானச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் குறித்த தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ததன் பின்னர் II ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வான்செலவுச் சேவைகளுக்காக குறித்த உரிமங்கள் அல்லது சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

7. சேவை வழங்குநரினால் அமைச்சரின் எழுத்தாலான அங்கீகாரமின்றி இங்கு பின்வரும் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வான்செலவுச் சேவைகளை வழங்குதல், மாற்றியமைத்தல், தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக இடைநிறுத்துதல் மேற்கொள்ளக்கூடாது.

8. செயற்படுத்தும் வேளையில் ஏற்கநேரிடும் பொறுப்புக்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பாக அரசுக்கு பொறுப்புக்கள் ஏதும் வழங்காத நிலையில் போதிய காப்புறுதி காப்பீடு நியதிச் சட்ட சேவை வழங்குநரினால் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

9. சேவை வழங்குநரின் நியதிச் சட்டம் வேறன்மை, பங்கு முதல் அல்லது பெயர் மாற்றுவதற்காக அமைச்சரின் முன் எழுத்தாலான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

10. சேவை வழங்குநரினால் அமைச்சரின் எழுத்தாலான அங்கீகாரமின்றி இங்கு பின்வரும் II ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள எதுவித வான்செலவுச் சேவை கைமாற்றம் அல்லது உட்குத்தகையிற்கு விடுதல் மேற்கொள்ளக்கூடாது.

### *அட்டவணை II*

### சேவை வழங்குநரினால் வழங்கப்படுகின்ற சேவைகள்

i. மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு

ii. தென் மாகாணத்தில் அமைந்துள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்.

iii. மேல் மாகாணத்தில் அமைந்துள்ள கொழும்பு விமான நிலையம், இரத்மலானை மற்றும் அமைச்சரினால் அவ்வப்பொழுது பிரசுரிக்கப்படுகின்ற வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் குறிப்பிடப்படுகின்ற ஏனைய விமானத்தளங்களுக்காக.

1. விமானங்களை சுத்திகரிக்கும் சேவைகள் உட்பட, ஏற்றிடத்தின் மேல் விமானங்களை வெளியேற்றுவதற்கு தேவையான உதவி அல்லது கருவிகள் அல்லது வழங்கீடு.

2. விமானங்களுக்காக நில தொழிற்பாட்டு வசதிகள் அல்லது சேவைகள் வழங்குதல்.

3. விமானங்களுக்கு உணவு வழங்கும் சேவைகளை வழங்குதல்.

*3-1152*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.